# வளர் தமிழ்

## பயிலல் வளநூல்

# 8




தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# தமிழ்

ஆண்டு 8

# ஆண்டு 8

# பயிலல் வளநூல்

நூலாக்கம்:

சின்னத்துரை கமலநாதன்
சர்வேசுவரி சோமசுந்தரம்
லதா தவராசேசுவரன்
விசயா செல்வநாயகம்

நூல் வடிவமைப்பு:
துரைசிங்கம் பிரபாகரன்

செய்திட்ட நிறைவேற்றுநர்
நகுலேசுவரி அரியரத்தினம்

பதிப்புரிமை:
தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவை

முதற்பதிப்பு: 2009

# முன்னுரை

அன்புடையீர்,

புலம்பெயர் நாடுகளில் பொழுதின்மை என்கிற பெரும் இடைஞ்சல்களுக் கிடையில் நீங்கள் உங்கள் தாய்மொழியில் கொண்ட நாட்டத்தால் தாய்மொழியைக் கற்றல்-கற்பித்தல் முயல்வில் ஈடுபட்டுள்ளீர்கள். உங்களுடைய முயல்வு முழுமையடைந்து அதன் இலக்கை நீங்கள் அடைய வேண்டுமென்கின்ற எதிர்பார்ப்பில் 'தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை' ஒல்லும் வகையெல்லாம் பாடாற்றி வருகிறது. அப்பாடாற்றலின் ஒரு விளைவுதான் உங்கள் கைகளில் தவழும் 'பயிலல் வளநூல் - தமிழ் ஆண்டு 8'. இந்நூலைத் துணைக்கொண்டு ஆண்டு எட்டுக்கான கற்றலில் ஐயந்திரிபற முழுமையடைந்து வளம்பெற வாழ்த்துகின்றோம்.

இந்நூலில் உங்களுக்கு ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகள், மயக்கங்கள், தவறுகள் எவையேனும் தோன்றினால் எமக்கு அறியத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவண்,
நகுலேசுவரி அரியரத்தினம்
ஒருங்கிணைப்பாளர்
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# உள்நிரல்


**அலகு 1**

மொழியியல் : எகர, ழகர ஒலிவேறுபாடு, சொல்விளக்கம் ........ 01
இலக்கணம் : சொல்லிய உறுப்புகள், தோன்றா உறுப்புகள் ........ 02
முன்னுணர்வு : மயிலும் வான்கோழியும் ........ 03
கருத்தறிதல் : தமிழிலக்கியம் ........ 04

**அலகு 2**

மொழியியல் : அமைப்பு அடிப்படைச் சொல்லியங்கள் ........ 06
இலக்கணம் : வேற்றுமை உருபுகள், நிகழ்கால வினைமுற்று ........ 08
முன்னுணர்வு : முல்லைக்கோட்டையின் வீழ்ச்சி ........ 09
கருத்தறிதல் : அன்னை பூபதி ........ 10
கட்டுரை : தமிழர் கொண்டாட்டங்கள் ........ 11

**அலகு 3**

மொழியியல் : கருத்து அடிப்படைச் சொல்லியங்கள், இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர் ........ 12
இலக்கணம் : இடைச்சொற்கள், இடைநிலைகள் ........ 13
முன்னுணர்வு : மலிவானதற்கு மதிப்பில்லை ........ 15
கருத்தறிதல் : தாமரை ........ 16

**அலகு 4**

மொழியியல் : சொற்பொருள், சொல்லியங்கள் எழுதுதல் ........ 18
இலக்கணம் : வேற்றுமைகள், ஐம்பால்விகுதிகள் ........ 19
முன்னுணர்வு : நெல்லிக்கனி ........ 19
கருத்தறிதல் : சுட்டபழம் ........ 20
கட்டுரை : காட்டுமல்லிகை ........ 22

**அலகு 5**

மொழியியல் : அமைப்பு அடிப்படைச் சொல்லியங்கள் ........ 23
இலக்கணம் : உடன்பாடு, எதிர்மறை வினைகள், இறந்தகால வினைமுற்று, விளிவேற்றுமை ........ 24
முன்னுணர்வு : எங்கும் நிறைந்தது ........ 25
கருத்தறிதல் : ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை ........ 26

**அலகு 6**

மொழியியல் : உயிரிகளின் ஒலிகள், உவமையணி ........ 29
இலக்கணம் : ஆகுபெயர், வேற்றுமை உருபு - பொருள் ........ 30
முன்னுணர்வு : ஆயரும் ஆனிரையும் ........ 31
கருத்தறிதல் : மாட்டுப்பொங்கல் ........ 32
கட்டுரை : வாழிடப்பள்ளி ........ 33

**அலகு 7**

மொழியியல் : உயிரிகளின் இளமைப்பெயர்கள்,கீறிட்ட இடம் நிரப்புதல் ....34
இலக்கணம் : தெரிநிலை வினைமுற்று, இடைநிலை, எதிர்ப்பொருட்கள் ....35
முன்னுணர்வு : நட்பு ஆராய்தல் ....36
கருத்தறிதல் : அறநெறித்தமிழ் ....37

**அலகு 8**

மொழியியல் : மரபுத் தொடர், சொற்பொருள் ....40
இலக்கணம் : எச்சவினைகள், காலங்கள் ....41
முன்னுணர்வு : மங்கையர் மாநாடு ....42
கருத்தறிதல் : பெண்ணின் பெருமை ....43
கட்டுரை : தமிழுக்குத் தந்த கனி ....44

**அலகு 9**

மொழியியல் : பழமொழிகள், மயக்கொலி, சொற்பொருள் ....45
இலக்கணம் : சொற்புணர்ச்சி ....46
முன்னுணர்வு : பெருமை ....47
கருத்தறிதல் : திருந்தாத குமுகாயம் ....48

**அலகு 10**

மொழியியல் : சொற்பொருள், சொல்லியம் எழுதுதல் ....50
இலக்கணம் : ஏவல்வினை, வியங்கோள்வினை ....51
முன்னுணர்வு : உணர்வுக்குழையல் ....52
கருத்தறிதல் : போர்பிரித்த உறவு ....53

**அலகு 11**

மொழியியல் : கீறிட்ட இடம் நிரப்புதல், உவமையணி, உருவகவணி ....56
இலக்கணம் : திணை பால் எண் இடம், எதிர்ப்பாற்சொற்கள் ....57
முன்னுணர்வு : பாணன் பெற்ற பரிசு ....58
கருத்தறிதல் : தமிழரின் மாந்தநேயப் போர்முறை ....59
கட்டுரை : சூழல் மாசடைதல் ....60

# அலகு 1

## மொழியியல்

**1. அ) கீறிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுதிச் சொல்லியம் ஆக்குவோம்.**

(ளகர ழகர ஒலி வேறுபாடு)

1. ஓர் இலையின் சருகுக்கு முந்திய பருவம் ____________ எனப்படும்.

   (பளுப்பு/பழுப்பு)

2. 'யாதும் ஊரே யாவரும் ____________' என்பது பழந்தமிழர் கொள்கை.

   (கேளிர்/கேழிர்)

3. பண்டைக்காலத்தில் தமிழர் ____________ அமைத்துத் தமிழ் வளர்த்தனர்.

   (களகம்/கழகம்)

4. ஐம்ருெங்காப்பியங்கள் கதை ____________ பேரிலக்கியங்கள் ஆகும்.

   (தழுவிய/தளுவிய)

5. ____________ என்பது புதிதாகத் தோன்றிய இலையைக் குறிக்கும்.

   (கொளுந்து/ கொழுந்து)

**ஆ) தரப்பட்டுள்ள சொற்களை விளக்குக.**

1. கடற்கோள்

   ____________

2. குடாக்கடல்

   ____________

3. இறக்குமதி

______________________________

4. கேளிர்

______________________________

5. போலி

______________________________

## இலக்கணம்

**2. அ) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லிய உறுப்பை எழுதி, எழுதிய உறுப்பின் வகையை, கீழுள்ள கோட்டில் எழுதுவோம்.**

1. பழந்தமிழர் கழகம் அமைத்துத் ______________ வளர்த்தனர்.

______________________________

2. பாவாணி நேற்று விழாவில் அருமையாகத் தாயகப் பாடல் ______________ .

______________________________

3. ______________ எல்லோரும் நல்ல பிள்ளைகளாக வளரவேண்டும் என்று ஆசிரியர் அறிவுரை கூறினார்.

______________________________

4. ______________ தாமரையை விடச் செந்தாமரை அழகாக இருக்கிறது.

______________________________

5. சான்றோர் எல்லா உயிர்களிடத்தும் ______________ இருப்பர்.

______________________________

**ஆ) தரப்பட்டுள்ள சொல்லியங்களில் தோன்றா உறுப்புகளையும் சொற்களையும் கண்டறிந்து எழுதுவோம்.**

1. நாளை விடுமுறைக்கு எங்கே போகிறாய்?

_______________________________________________

2. விழாவில் நீ நன்றாகப் பாடினாய்.

_______________________________________________

3. உங்களது தமிழாசிரியர் எங்கே?

_______________________________________________

4. நேற்று விடிய விடிய மழை.

_______________________________________________

5. இதை விட நல்லது.

_______________________________________________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

**மயிலும் வான்கோழியும்**

| | | | |
|---|---|---|---|
| தூவாணமாய் | வான்கோழி | நீர்வீழ்ச்சி | ஆடற்கலையை |
| மயில்கள் | மாந்தர் | ஆலின | வண்ண |

அது ஒரு குன்றின் அடிவாரம். குன்று மெல்லமெல்லச் சரிந்து வந்து நிலத்துடன் இணையும் இடம். இவ்விடத்தைச் சாரல் என்று கூறுவர். சாரலிலே வீழ்கிற ______________ ஒரு பெரிய மடுவாய் தேங்கியுள்ளது. தேங்கிய மடுவிலிருந்து நீர் சிற்றாறாய்ச் சலசலத்து ஓடுகிறது. சாரலின் நீர் வளத்தால் பார்க்குமிடம் எங்கும் ______________ மலர்களின் கூட்டம். மஞ்சளாய் சிவப்பாய் பொன்னிறமாய் வண்ணக் கலவையாய் அழகு சாரலெங்கும் நிறைந்து

கிடக்கிறது. அந்த மடுவில் நீர்வீழ்ச்சி விழும் அதிர்வில் மடுத் தண்ணீர் பொங்கித் ______________________ காற்றில் கலக்கிறது. இந்நீர்த் திவலைகளால் கதிரவன் ஒளி மங்குகிறது. இதைக்கண்டு ______________________ கார்முகில் என்று எண்ணிக் களித்தன. தம் அழகிய தோகைகளை விரித்து ______________________ . எங்கும் மலர்கள்; மலர்களிடையே மயில்களின் ஆலல். இந்த இனிய காட்சியைக் கண்டது ______________________. அதனுடைய உள்ளத்திலே களிப்புக் கரை புரண்டது. தானும் மயிலைப் போல் ஆடவேண்டும் என்று பேராவல் கொண்டது. உடனே தனக்குத் தெரிந்த வரையில் தன் இறக்கைகளை விரித்து ஆடி மகிழ்ந்தது. இதைப் புரிந்து கொள்ளாத ______________________, அழகிய மயில் ஆடலாம் வான்கோழி ஆடலாமா? என்று எள்ளி நகையாடினர். இந்த மாந்தர்களின் எண்ணக்கரு பிழையானது. மயிலின் ஆட்டத்தை வான்கோழி ஆடக்கூடாது என்றால், ஆட விரும்புவோர் எப்படி ______________________ கற்பது? எப்படிப் பிறரும் ஆடி மகிழ்வது?

**4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### தமிழிலக்கியம்

இலக்கியங்களை உடைய உலகின் பண்டைய மொழிகள் ஒருசிலவே. அத்தகைய பண்டைய மொழிகளில் ஒன்றான தமிழ் சிறந்த இலக்கிய வளமுடையது. தமிழிலக்கியங்கள் தமிழரது நானில வாழ்க்கை ஒழுக்கங்களையும் அறங்களையும் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டவை. தமிழின் எந்தவொரு இலக்கியத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் வாழ்வியல் அறங்களைப் பற்றி அழுத்திக் கூறுவதே நோக்காமாகக் கொண்டிருப்பதைக் காணலாம். பாரதம், இராமாயணம் போன்ற வடமொழி இலக்கியங்களை எடுத்துக்கொண்டால் பெண் இழிந்தவள்; அதனால், இழிவான செய்கைகளுக்கு உட்பட்டவள் போன்ற பார்ப்பார நயவஞ்சகக் கருத்துகளைப் பரப்புவனவாக அமைந்துள்ளன. பல்வேறு மொழிகளைப் பேசும் இந்திய மக்களை சமற்கிருதம் என்றொரு வடமொழி மூலம் இறைவழிபாடு செய்யவைக்கும் சூழ்ச்சி உடையது வடமொழி இலக்கியம். ஆனால், தமிழோ உலகின் முதன்மைச் சமயங்கள் அத்தனைக்கும் அறவழி, அன்பின்வழி இலக்கியம் படைத்த மொழியாகும்.

தமிழ் இலக்கியங்கள் உலகமக்கள் அனைவரும் பின்பற்ற வேண்டிய அறநெறிகளைக் கூறுவன மட்டுமன்றி, அறந்தவறின் விளையக்கூடிய தீப்பயன்களையும் எடுத்துக் கூறுகின்றன. இதனால், மக்கள் அறந் தவறுவதற்கு அஞ்சி ஒழுக்க வாழ்வு வாழ்வர். இத்தகைய உயர் சிந்தனைகளையுடைய தமிழ் இலக்கியங்களில் மிக உயர்ந்தது திருக்குறள். உலக அறிஞர் அனைவரும் ஒருசேரப் போற்றும் பெருமைக்கும் உரியது. திருக்குறள் தமிழில் தோன்றியிருப்பினும் உலகமக்கள் அனைவருக்கும் ஏற்ற கருத்துகளைக் கூறுவதால் உலகப்பொதுமறை என்று போற்றப்படுகிறது.

1. திருக்குறள் தமிழில் தோன்றியும் உலகப்பொதுமறை என்று போற்றப்படுவதற்குக் கரணியம் என்ன?

______________________________

______________________________

2. நானிலங்கள் எவை? தமிழ் இலக்கியங்கள் எவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டவை?

______________________________

______________________________

3. இராமாயணம், பாரதம் போன்ற வடமொழி இலக்கியங்கள் எத்தகையவை?

______________________________

______________________________

4. தமிழ் இலக்கியங்கள் எதனை அழுத்திக் கூறுகின்றன?

______________________________

______________________________

5. உலகின் முதன்மைச் சமயங்கள் அத்தனைக்கும் இலக்கியம் படைத்த மொழி எது?

______________________________

______________________________

# அலகு 2

## மொழியியல்

### 1.அ) தொடர்ச் சொல்லியமாக்குவோம்.

1. செவ்வண்ணன் கடைக்குச் சென்றான்.

   செவ்வண்ணன் கறிக்காய்கள் வாங்கினான்.

   ______________________________________________

   ______________________________________________

2. தண்ணளி தமிழ்த்திறன் போட்டியில் பங்கு பற்றினாள்.

   தண்ணளி போட்டியில் வெற்றி பெற்றாள்.

   தண்ணளி முதற் பரிசு பெற்றாள்.

   ______________________________________________

   ______________________________________________

### ஆ) தனிச்சொல்லியங்கள் ஆக்குவோம்.

1. போராளிகள் இறுதிவரை எதிர்த்து நின்று, பகைவரைத் திணறடித்து இறுதியில் வஞ்சனையால் வீரமரணம் அடைந்தனர்.

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

2. பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் பெரும் படையைத் திடீரென எதிர் கொள்ள நேரிட்டதால் போரின் போது விழுப்புண்பட்டு வீரச்சாவடைந்தான்.

   ______________________________________________

   ______________________________________________

   ______________________________________________

**இ) கலப்புச் சொல்லியம் ஒன்று எழுதுவோம்.**

______________________________

______________________________

**ஈ) தரப்பட்டுள்ள சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. முத்தமிழ் ______________________________

______________________________

2. தொன்மை ______________________________

______________________________

3. அரங்கேற்றம் ______________________________

______________________________

4. கைப்பற்றுதல் ______________________________

______________________________

5. வெள்ளோட்டம் ______________________________

______________________________

**உ) எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுவோம்.**

1. பண்டாரவன்னியனது ஆற்றலும் உருதியும் ஆங்கிழேயப் படைகலை வியப்பிற்கு உல்லாக்கின.

______________________________

2. பண்டாரவன்னியனை எப்படியேனும் அலித்து விடவேண்டுமென்ரு ஆங்கிலேயப்படை முணைந்தது.

______________________________

3. கற்சிலை மடுவில் உள்ள கல்வெட்டு பண்டாரவன்னியனின் நினைவை நிலை நிறுத்தும் நினைவுக்கள்ளாக நிக்கிறது.

______________________________

4. பூங்காவிள் பூக்கல் கொத்துக் கொத்தாகப் பூத்திருன்தன.

______________________________

5. சேரன் வகுப்பில் முதல் மானவணா திகல்ந்தான்.

______________________________

## இலக்கணம்

2. அ) தரப்பட்டுள்ள சொற்களுடன் வேற்றுமை உருபுகளைப் புணர்த்தி எழுதுவோம்.

| | ஐ | ஆல் | கு | அது |
|---|---|---|---|---|
| 1. பாவளன் | | | | |
| 2. நான் | | | | |
| 3. இது | | | | |
| 4. அவை | | | | |
| 5. மரம் | | | | |

ஆ. கீழ்வரும் சொல்லியங்களில் கீறிட்ட இடங்களை நிகழ்கால வினைமுற்றுகளால் நிறைவு செய்வோம்.

1. மங்கை அவையோர் வியக்கும் வண்ணம் ______________
2. மாணவர் விளையாட்டுத் திடலில் விறுவிறுப்பாக ______________
3. கனியன் பள்ளிக்கு நேரமாகிவிட்டதால் விரைந்து ______________
4. கலையரங்கில் பாடகரின் இனிய பாடலைச் சுவைத்த அவையினர் கை ______
5. குன்றனும் எழிலியும் விடுமுறையில் சுற்றுலா ______________

3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.

## முல்லைக் கோட்டையின் வீழ்ச்சி

| | | | |
|---|---|---|---|
| அஞ்சாத | இறுமாப்போடு | போரறம் | ஆங்கிலப்படை |
| முற்றுகை | வன்னிமறவர் | கடலோர | நிலவழியாக |

முல்லைத்தீவின் ______________ வளைகுடா. அங்கே பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஒரு கோட்டை ஆங்கிலேயரால் கட்டப்பட்டு ______________ நிமிர்ந்து நிற்கிறது. முப்புறம் கடல் சூழ்ந்த அரணோடு நிற்கிறது. இக்கோட்டை வன்னிமண்ணின் அரணுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இக்கோட்டையைக் கைப்பற்றித் தகர்க்க எண்ணினான் பண்டாரவன்னியன். ஒரு வைகறைப்பொழுது வன்னியின் படைகள் கோட்டையைச் சூழ்கின்றன. வன்னியின் வீரமறவர்கள் எதற்கும் ______________ நெஞ்சுரம் கொண்டவர்கள். படகுகளால் குடாக்கடலைக் கடந்து கோட்டையை நெருங்கி ______________ இடுகின்றனர். இன்னொரு பிரிவினர் ______________ கோட்டையின் நிலப்பகுதியைச் சுற்றி வளைத்தனர். கோட்டையிலிருந்த பீரங்கிகள் முழங்குகின்றன. ஆங்கிலேயக் கடற்படைக் கப்பல்களிலிருந்து உதவிப்படை விரைகிறது. வன்னி மறவர்கள் கடலில் வைத்தே அவர்களைக் கொன்றொழித்தனர். பீரங்கிக் குண்டுகளுக்கு அஞ்சாது ______________ அடர்ந்து நெருங்கி வீரவிளையாட்டு ஆடுகின்றனர். இன்னும் சிலர் மதில்மேல் கயிறெறிந்து தடம்போட்டு வாயில் வாளுடன் கோட்டையில் ஏறுகின்றனர். உள்ளும் புறமும் தமிழரின் வீரவிளையாட்டு. தாக்குப் பிடிக்க முடியாத ______________ கோட்டையை விட்டுவிட்டுத் தப்பியோடினர். முதுகில் தாக்குவது ______________ அன்று என்பது மறத்தமிழன் போர்மரபு. அதனால், அவர்களைத் தொடர்ந்து துரத்திச் சென்று கொல்வதற்குப் பண்டாரவன்னியன் ஏற்பளிக்கவில்லை. ஆங்கிலப் படையின் பீரங்கிகள் வன்னியரால் கைப்பற்றப்பட்டன. கோட்டை தகர்க்கப்பட்டது. இறுமாந்து நின்ற ஆங்கிலக்கோட்டை சாம்பல் மேடாகக் குவிந்தது.

**4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### அன்னை பூபதி

பூ என்றால் உலகம். பதி என்றால் முதல்வர். ஓம்! அன்னை பூபதி தாய்க்குலத்தின் தலைவியாய், உலகின் பெண்குலத்திற்கே கோபுரக்கலசமாய் அமைந்தவர். மீன்பாடும் மட்டுநகரின் இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் கழனிகள் சூழ்ந்த ஆரையம்பதியிலே அன்னை பூபதி தோன்றினார். இப்புடவி எங்கும் தாய்க்குலத்தின் பெருமையை, நெஞ்சுரத்தைப் பறைசாற்றினார். உலகின் சிறந்த பெண்ணாக மதிக்கப்படும் அன்னை திரேசா வாணாள் முழுவதும் ஏழைகளுக்காய், துன்புற்றோருக்காய் உழைத்தார். அதேபோல தமிழீழம் தந்த அன்னை பூபதியோ மாற்றாரின் காட்டுமிராண்டித் தனமான படுகொலை வெறியாட்டத்திலிருந்து தமிழ்மக்களைக் காப்பதற்காகத் தன்னுயிரையே ஈகம் செய்தார். அருளாண்மை வழியில் அறங்கேட்டு உண்ணாநோன்பு மேற்கொண்டு, இந்தியத்தின் போலி காந்திய முகமூடியைக் கிழித்தெறிந்த திலீபன் உயிர்துறந்தான் என்ற செய்தி கேட்டுத் துடித்தெழுந்தார் அன்னை பூபதி. தன்னிரு மக்களையும் விடுதலைக்காக விதைத்தும் கலங்காதிருந்த இந்தத் தாய், திலீபனைச் சாகவிட்ட இந்தியத்திடம் நியாயம் கேட்டு சாகும்வரை உண்ணாநோன்பு மேற்கொண்டார். ஆனால், இந்தியமோ அவர் ஒரு தாய் என்பதையும் மதியாது அவரைச் சாகவிட்டது. அந்தத் தாயின் இம்மாபெரும் ஈகத்தைக் கண்டு உலகமே அதிர்ந்தது. அன்னை பூபதி தமிழினத்தின் தெய்வம், காவல் தெய்வம். அருளாண்மைக்கு உயிரூட்டத் தன்னுயிரைப் போக்கிய அம்மா பூபதியின் நினைவுகளை என்றும் போற்றுவோம்.

அருளாண்மை - அறவழி

1. பூபதி என்றால் பொருள் என்ன?

________________________________

________________________________

2. அன்னை பூபதியையும் அன்னை திரேசாவையையும் ஒப்பிடுக.

________________________________

________________________________

3. எதற்காக அன்னை பூபதி உண்ணா நோன்பு இருந்தார்?

4. திலீபன் என்பவர் யார்?

5. ஈகம் என்ற சொல்லின் பொருள் யாது?

**5. 'தமிழர் கொண்டாட்டங்கள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுவோம்.**

# அலகு 3

## மொழியியல்

1. அ) தரப்பட்டுள்ள சொல்லிய வகைகளின் பொருள் புலப்பட சொல்லியங்கள் எழுதுவோம்.

1. கூற்று

______________________________

2. வினா

______________________________

3. ஏவல்

______________________________

4. மெய்ப்பாடு

______________________________

ஆ) தரப்பட்டுள்ள இரட்டைக்கிளவிகள் சரியாகப் பொருந்தச் சொல்லியங்கள் எழுதுவோம்.

1. கடுகடு

______________________________

2. குபுகுபு

______________________________

3. தரதர

______________________________

4. பொலபொல

______________________________

5. தொணதொண

______________________________

**இ) தரப்பட்டுள்ள அடுக்குத்தொடர்கள் சரியாகப் பொருந்தச் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. கதறிக்கதறி

_______________________________________________

2. கீழேகீழே

_______________________________________________

3. மேலேமேலே

_______________________________________________

4. பாடிப்பாடி

_______________________________________________

5. திக்கித்திக்கி

_______________________________________________

## இலக்கணம்

**2. அ) தரப்பட்டுள்ள சொல்லியங்களில் கீறிட்ட சொற்களில் இடம்பெற்றுள்ள இடைச் சொற்களைக் கண்டறிந்து எவ்வகை இடைச்சொற்கள் என எழுதுவோம்.**

1. நல்ல <u>பிள்ளைகளை</u> ஈன்றோர் மட்டுமல்ல ஊராரும் விரும்புவர்.

_______________________________________________

2. <u>வன்னியில்</u> நிகழ்ந்து முடிந்த பேரவலம் தமிழர் <u>வரலாற்றில்</u> பெரும் வடு.

_______________________________________________

3. கொலைவெறி பிடித்த இனத்தாரிடையேயும் <u>சான்றோர்</u> உள்ளனர்.

_______________________________________________

4. நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய் <u>இருப்பான்</u> உண்மை <u>நண்பன்</u>.

_______________________________________________

5. படைகளின் வெறியாட்டத்திற்கு அஞ்சி மக்கள் ஏதிலிகளாக வெளியேறினர்.

________________________________________

6. நிலம் நீர் மண் விண் வளி. இவற்றை ஐம்பூதங்கள் என்பர்.

________________________________________

7. பயன்மரங்களை வெட்டாது பேணி வளர்த்தல் வேண்டும்.

________________________________________

8. நாள்தோறும் கீரை வகைகளை உண்பது உடனலத்தைக் காக்கும்.

________________________________________

9. கதிரவனே உலகின் அனைத்திற்கும் கரணியமானவன்.

________________________________________

10. நாடுதோறும் தமிழர் கவனயீர்ப்பு நிகழ்வுகளை நடத்துகின்றனர்.

________________________________________

**ஆ. தரப்பட்டுள்ள வினைமுற்றுகளில் காணப்படும் காலங்களையும் இடைநிலைகளையும் கண்டறிந்து எழுதுவோம்.**

| | காலம் | இடைநிலை |
|---|---|---|
| 1. ஓடுகின்றன | | |
| 2. கற்றனர் | | |
| 3. வரும் | | |
| 4. பாடுகிறது | | |
| 5. ஓடுகிறது | | |
| 6. செல்வான் | | |
| 7. உண்டாள் | | |
| 8. காண்பர் | | |
| 9. போவான் | | |
| 10. தேடினான் | | |

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

## மலிவானதற்கு மதிப்பில்லை

| | | | |
|---|---|---|---|
| தாமரையும் | மலிவாக | குமுகாயம் | காட்டுமல்லிகையை |
| கமழ்ந்தது | குளிர்மை | வெள்ளம் | ஊட்டி |

கார்காலம் வந்தடைந்தது. காற்றிலே கலந்து ____________________ சில்லென்று உடலைத் தழுவியது. கோடையில் வெப்பத்தால் வாடிய நிலைத்திணைகள் எல்லாம் தம்முள் மகிழ்வில் சிலிர்த்தன. மழைகொட்டத் தொடங்கியது. பார்த்த இடமெங்கும் ____________________. நிலைத்திணைகள் நீரின் ஊட்டலால் செழித்தன. வாடிக்கிடந்த நெற்பயிர்கள் மதர்த்துச் செருக்குடன் தலைநிமிர்ந்து நின்றன. மாவும் காவும் மலர்சொரிந்தன. நிலமும் நீரும் மலர்க்காடாயிற்று. பொய்கைகள் ____________________ அல்லியும் ஆம்பலும் நீலமுமாய் நிறைந்தன. காடும் பூத்தது; நாடும் பூத்தது. வீடுகள் தோறும் மல்லிகை, முல்லை, செவ்வந்தி, முட்செவ்வந்தி எனப் பன்மலர் மலிந்தன. மக்களால் ____________________ வளர்க்கப்பட்டதால் தளதளவெனச் செழித்து மலர்ந்திருந்தன. அதனால், நறுமணம் எங்கும் ____________________. நோக்குமிடமெல்லாம் நிறைந்து கண்ணைக் கவரும் காட்டுமல்லிகையை மட்டும் வீடுகளில் காணவில்லை. முல்லையிலும் அழகாகக் கொத்துக்கொத்தாக மலர்ந்து எழில்கூட்டும் அந்த மலர்ச்செடி தெருவோரங்களிலும் குப்பைமேடுகளிலுமே காணப்பட்டது. ஏன்? அது அழகில், கமழ்வில் குறைந்ததா? ____________________ விட எதிலும் உயர்ந்து விடாத முல்லையைப் பேணி வளர்க்கும் மாந்தர், சூழலில் தானாகவே தோன்றி வளரும் காட்டுமல்லிகையை வெறுத்தனர். ஏனெனில், அது அவர்களின் முயல்வு இன்றியே இயல்பாக வளர்கிறது. இதுதான் மாந்தப் பண்பு. ____________________ கிடைப்பது இழிந்தது. இது தான் அவர்களது கணிப்பு. மலர்களில் மட்டுமல்ல மக்கள் குமுகாயத்திலும் அப்படித்தான். பேரறிஞனாய் பெரும்புலவனாய் இருந்தாலும் அவன் குமுகாயத்தில் மக்களோடு மக்களாய் வாழ்ந்தால் ____________________ அவனை மதிப்பதில்லை. அவர்களோடு அவன் வாழ்வதால் அவனது மதிப்புக் குறைகிறது. ஆனாலும், அவன் கலங்குவதில்லை. தன் குறிக்கோளை நோக்கி முன்னேறிக் கொண்டேயிருப்பான்.

**4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## தாமரை

"பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை" என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியுள்ளார். ஓம்! இயற்கை நமக்கு அளித்த மலர்களில் எல்லாம் பெரியதும் அரியதும் தாமரை மலர்தான். பளிங்கென மின்னும் நீர் நிறைந்த தடாகத்தில், தண்ணீரை நொய்வத்தால் மூடியது போல் பச்சைப்பசேலென தாமரை இலை மூடிப் படர்ந்திருக்கும். இவ்விலைகளின் மேல் மீன்களின் துள்ளலால் தெறித்த நீர்த்துளிகள். காற்றினால் இலைகள் ஆடும்போது இலைகளின் மேலுள்ள நீர்த்துளிகள்; வெள்ளிமணி போன்று இலையில் ஒட்டாமல் உருண்டு கொண்டிருக்கும். இலைகளுக்கு மேலே தலைதூக்கி நிமிர்ந்து நின்று தாமரைப்பூக்கள் மலரும். பூக்களில் பெரிய பூ தாமரைப்பூ. வண்டு அளைந்து குடைந்து தேன் அருந்தாமையால் தாமரை மலர்கள் புத்தம்புதிய பொலிவோடு மலர்ந்திருக்கும். தாமரை நீர்ப்பூ ஆதலால், பிற மலர்களைப்போல் பிற உயிரிகளால் தீண்டப்படாது தண்ணெனக் குளிர்ந்திருக்கும். இம்மலரின் தூய்மை நோக்கிப் போலும் சான்றோரின் திருவடிகளை தாமரைக்கு உவமிப்பர். மாந்தரின் நல்ல உள்ளத்தையும் 'உள்ளக் கமலம்' என்று போற்றுவர். இந்த அருமையான பூவிலே பலவகை உண்டு. வெள்ளைவெளேரென மலர்ந்து இருப்பது வெண்டாமரை. அந்தி வானத்துச் செம்மையின் அழகில் பொலிவது செந்தாமரை. குங்குமச் சிவப்பில் மலர்வது செங்கழுநீர். பூவிதழ்கள் நெருக்கம் இன்றியும் கூரானதாகவும் இருப்பது அல்லித்தாமரை. அல்லியும் வெண்மை, செம்மை ஆகிய வண்ணங்களில் மலரும். காலையில் கதிரவன் காலிப்பதைக் கண்டு மலர்வது தாமரை. மாலையில் நிலவு காலிப்பதைக் கண்டு மலர்வது அல்லி என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நொய்வம் - இரப்பர்

1. பூக்களுள் சிறந்த பூ எது?

_______________________________________________

_______________________________________________

2. குளத்தில் தண்ணீரை மூடியுள்ள இலைகள் எவ்வாறு காட்சியளிக்கின்றன?

3. உள்ளக்கமலம் என்றால் என்ன?

4. குங்குமச் சிவப்பில் மலரும் மலர் எது?

5. அல்லிமலர் எப்போது மலரும்?

# அலகு 4

## மொழியியல்

**1. அ) சொற்பொருள் எழுதுவோம்.**

1. புலமை ____________
2. நூற்றாண்டு ____________
3. பைந்தமிழ் ____________
4. பன்னூறு ____________
5. கார் ____________
6. கேளிர் ____________
7. எதிரி ____________
8. தீந்தமிழ் ____________
9. இறுதி ____________
10. எழில் ____________

**ஆ) கீழ்வரும் சொற்களின் பொருள் புலப்படுமாறு சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. ஆயுள் ____________
2. திண்தோள் ____________
3. அடவி ____________
4. பிளவு ____________
5. துறவி ____________

## இலக்கணம்

**2. அ) தரப்பட்டுள்ள வேற்றுமைகளின் உருபுகள் புலப்பட சொல்லியங்கள் எழுதுவோம்.**

2ம் வேற்றுமை

____________

3ம் வேற்றுமை

____________

4ம் வேற்றுமை

______________________________________________

5ம் வேற்றுமை

______________________________________________

6ம் வேற்றுமை

______________________________________________

**ஆ) தரப்பட்டுள்ள வினையடிகளுடன் ஐம்பால் விகுதிகளைப் புணர்த்தி வினைமுற்றுகளாக்குவோம்.**

| | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|---|
| 1. ஓடு | | | | | |
| 2. நீந்து | | | | | |
| 3. விளையாடு | | | | | |
| 4. உண் | | | | | |
| 5. பார் | | | | | |

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

## நெல்லிக்கனி

| | | | |
|---|---|---|---|
| கருநெல்லி | ஔவைப் பாட்டி | தமிழ் | திரிந்து |
| அதியர்மான் | உச்சியில் | உலகிற்கு | வேரின் |

தகடூர் மன்னனான அதியர்மான் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். காட்டிலே பகல் முழுவதும் ______________ வேட்டையாடிவிட்டு ஊருக்குத் திரும்பினான். திரும்பி வரும் வழியில் ஒருமலையைக் கண்டான். அப்பெருமலை வெடித்துப் பிளந்திருப்பதைக் கண்டு வியப்புடன் அண்ணாந்து பார்த்தான்.

அம்மலையின் ____________________ ஒருநெல்லிமரம் வளர்ந்திருந்தது. அந்த மரத்தின் வேர்தான் மலையைப் பிளந்திருந்தது. நெல்லிமர ____________________ ஆற்றலை வியந்துகொண்டு நன்றாக நெல்லியைப் பார்த்தான். அதில் ஒரேயொரு கனி தொங்கிற்று. அதியர்மானுடன் வந்த ஒரு பெரியார், அது ____________________ என்றும் அந்த ஒற்றைக் கனியை உண்டால் இறப்பு அணுகாது என்றும் கூறினார். அதியர்மான் அந்தக் கனியைப் பறிக்குமாறு காவலர்களை ஏவினான். "ஆகா! சாவா மருந்தாகிய கனி ஒன்றுதானே உள்ளது. இதையார் உண்ணலாம்?" என்று எண்ணிப்பார்த்தான். "இந்தக் கனியை உண்பவர் ____________________ நன்கு பயன்படுபவராக இருக்கவேண்டும். என்னைவிட நாட்டுக்குப் பயன்படுபவராக இருக்க வேண்டும். யாருக்கு இக்கனியை உண்ணக் கொடுக்கலாம்?" என்று எண்ணமிட்டவாறே அரண்மனைக்கு வந்தான். அவனுடைய எண்ணத்திலே தமிழ்க்கடலாகிய ____________________ வந்தாள். ஓம்! ஔவை தான் நீடூழி வாழவேண்டும். அவள் வாழ்ந்தால் ____________________ வாழும் என்று முடிவு கட்டினான். ஔவையை அழைப்பித்தான். "ஔவையாரே! இந்தாருங்கள் ஒரு நெல்லிக்கனி உண்டு மகிழுங்கள்" என்று வழங்கினான். உண்டுசுவைத்த ஔவை அருமையான இனிய கனி! என்று பாராட்டினாள். அதன்பின் தான், அக்கனி நீண்ட வாழ்வுதரும் கனி என்பதை ____________________ கூறினான். அதியர்மானின் அவ்வுயரிய கொடைப் பண்பைக் கண்டு சூழ நின்றோர் போற்றினர்.

**4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## சுட்டபழம்

அதியர்மானிடம் நெல்லிக்கனியைப் பெற்று உண்ட ஔவையார் அவனுக்காகத் தூது செல்கிறார். அதியர்மானுடைய தமிழ்ப் பற்றையும் கொடை உள்ளத்தையும் எண்ணி வியந்தவாறு நடந்து கொண்டிருக்கிறார். சரியான கோடை வெய்யில். அந்தப் பாலைநிலக் காட்டு வழியிலே வியர்க்க வியர்க்க நடந்து கொண்டிருக்கிறார். அவருக்கு நீர் விடாய் மிகுந்தது. அக்கம்பக்கத்தில் தாகத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் என்று தோன்றவில்லை. தூரத்தே நன்கு சடைத்து வளர்ந்த ஒரு மரம் தெரிந்தது. அதன் நிழலில் சிறிது இளைப்பாறலாம் என்ற மகிழ்வுடன் விரைந்து சென்றார்.

அது ஒரு பெரிய நாவல் மரம். நாவல் மரத்தின் நிழலில் சில ஆடுகள் படுத்திருந்தன. ஔவையார் அந்த நிழலின் குளிர்மையில் அமர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தார். யாரையும் காணவில்லை. ஆடுகள் படுத்திருக்கின்றன. ஆட்டிடையனைக் காணவில்லையே! என்று ஔவையார் எண்ணிக்கொண்டிருக்க, என்ன பாட்டி களைத்துப் போனீர்களா? என்றொரு குரல் கேட்டது. ஔவையார் நிமிர்ந்து பார்த்தார். நாவல் மரத்தின் கிளையில் ஒரு சிறுவன் உட்கார்ந்து நாவற்பழங்களை ஆய்ந்து மென்று தின்றுகொண்டிருந்தான். அருமையான நெல்லக்கனியையே உண்ட ஔவைக்கு நாவற்பழம் பெரிதா? எனினும் நீர் வேட்கையால் நாவற்பழத்தில் விருப்புண்டாயிற்று. “தம்பி! எனக்கும் கொஞ்சம் பழங்கள் ஆய்ந்து தருகிறாயா?” என்றார். “பாட்டி சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?” என்று கேட்டான் சிறுவன். ஔவை திகைத்துப் போனார். பெரும்புலவரான எனக்குச் சுட்டபழம், சுடாதபழம் தெரியாதே! எதற்கும் பார்ப்போம் என்று எண்ணிய ஔவை, “சுட்டபழமாய்ப் போடு” என்றார். சிறுவன் நாவற்கிளையைப் பிடித்து உலுப்பினான். உலுப்பலில் நன்கு கனிந்த பழங்கள் காம்பு கழன்று மண்ணில் வீழ்ந்தன. நன்றாகக் கனிந்த பழங்களாதலால் சிறிது நசிந்து மணல் ஒட்டிக் கொண்டது. ஔவையார் பழங்களைக் கையில் எடுத்து மணல் போக வாயால் ஊதினார். “என்ன பாட்டி சுடுகிறதா?” என்று சிறுவன் கேட்டான். பெரும் புலத்தியான என்னை ஒரு சிறுவன் மடக்கிவிட்டானே! என்று ஔவையார் நாணித் தலை குனிந்தார்.

உலுப்புதல் - ஆட்டுதல்

1. ஔவையார் எத்தகைய வழியில் செல்கிறார்?

________________________________________

________________________________________

2. ஔவையார் எந்த மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தார்?

________________________________________

________________________________________

3. மரத்தில் இருந்த சிறுவன் ஔவையாரைக் கேட்ட கேள்வி என்ன?

________________________________________

________________________________________

4. ஏன் ஔவையார் நாவற்பழத்தை ஊதினார்?

_______________________________________________

_______________________________________________

5. ஔவையார் ஏன் நாணித் தலை குனிந்தார்?

_______________________________________________

_______________________________________________

**5. 'காட்டு மல்லிகை' என்ற பாடலின் பொழிப்பை உமது உரைநடையில் எழுதுக.**

# அலகு 5

## மொழியியல்

**1.அ. தரப்பட்டுள்ள சொல்லிய வகைகளின் அமைப்பு அடிப்படையில் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. தனிச் சொல்லியம்

______________________________

______________________________

2. கூட்டுச் சொல்லியம்

______________________________

______________________________

3. கலப்புச் சொல்லியம்

______________________________

______________________________

**ஆ) எழுத்துப் பிழைகளைத் திருத்தி, கீழேயுள்ள கோட்டில் எழுதுவோம்.**

காளமேகம் நீன்ட தொலைவிலிருந்து பசிக்கழையுடன்

______________________________

ஊருக்குல் புகுந்தார். அங்கே ஓறிடத்தில் ஒறுத்தி

______________________________

மேர் விற்ருக் கொண்டிறுந்தாள். காளமேகம் ஒரு குவளை

______________________________

மோர் வான்கிக் குடித்தார். மோர் தண்ணியாக இறுந்தது.

______________________________

## இலக்கணம்

**2. அ) தரப்பட்டுள்ள உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகளாக்கிச் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. கற்பான்

_______________

2. பறக்கும்

_______________

3. ஓடியது

_______________

4. படிக்கிறான்

_______________

5. உண்டனர்

_______________

**ஆ) கீறிட்ட இடங்களில் இடம்பெற வேண்டிய இறந்தகால வினைமுற்றுகளை எழுதுவோம்.**

1. பச்சைப் புல்வெளியில் மாடு _______________
2. ஆன்கன்றுகள் துள்ளி _______________
3. மீன்தொட்டியில் மீன்கள் _______________
4. அணில் பழம் கொறிக்க மரத்தில் _______________
5. நீலவானில் பறவைகள் _______________

**இ) தரப்பட்டுள்ள பெயர்ச்சொற்களுடன் விளிவேற்றுமையைப் புணர்த்தி சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. நண்பன்

_______________

2. தந்தை

________________________________________

3. மகள்

________________________________________

4. அம்மா

________________________________________

5. அரசன்

________________________________________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

**எங்கும் நிறைந்தது**

| | | | |
|---|---|---|---|
| தாகத்துடன் | தண்ணீர் | வெப்பம் | கார் |
| சுவையின்றி | வெய்யில் | பக்கத்தில் | ஆத்தொழில் |

எங்களுடைய தாயகம் அமைந்துள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ______________ அதிகம். கார்காலமோ கோடைகாலமோ இளவேனிலோ முதுவேனிலோ எக்காலம் ஆயினும் வெப்பந்தான். வெப்பத்தின் அளவில் ஏற்றம் இறக்கம் இருக்கும். முதுவேனிற் காலத்தில் உடலைச் சுட்டெரிக்கும் ____________ எறிக்கும். வெய்யிற் காலத்தில் உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கவும் தாகத்தைத் தீர்ப்பதற்கும் மோர் சிறந்தது. எனவே, அக்காலத்தில் மக்கள் மோரை அதிகம் விரும்பிப் பருகுவர். ஆதலால், ____________ செய்வோர் மோர் கரைத்து விற்பர். வெய்யிற் காலத்தில் கூடுதலாக மோர் தேவைப்படுவதால் மோர் விற்போர் மோரில் நீரைக் கலப்பர். ஒருநாள் மிகுந்த ________________ வந்த ஒரு புலவர் மோர் விற்பவளிடம் மோர் வாங்கிக் குடித்தார். அம்மோர் அதிகம் தண்ணீர் கலக்கப்பட்டிருந்ததால் சுவையின்றிச் சப்பென்றிருந்தது. இது மோரோ? என்று மோர்க்காரியிடம் கேட்டுச் சிரித்தார். அப்போது

______________________ நின்றவர் ஏன் சிரிக்கிறீர்கள் என்று வியப்புடன் கேட்டார். இதோ! மோர் என்று விலைக்கு வாங்கிக் குடிக்கிறேனே! இதை நான் முன்னரும் குடித்திருக்கிறேன். ஆனால், அதற்குத் ______________________ என்று பெயர். விலையின்றிக் கிடைத்தது. அதற்கு முன் நான் இதைக் கார் என்ற பெயரில் விண்ணில் கண்டிருக்கிறேன். ஆனால் குடிக்கவில்லை என்றார். கேட்டவருக்கு விளங்கவில்லை. "ஐயா! மோர் என்று நான் குடித்த பொருள் இந்தப் பானைக்குள் வருவதன் முன் நீரென்ற பெயருடன் இருந்தது. அந்த நீர் மழையாய் நிலத்துக்கு வருவதன் முன் வானில்______________ என்ற பெயரில் இருந்தது. ஒரே பொருள் மூன்று பெயர்களுடன் எங்கும் நிறைந்து விளங்குவதை எண்ணிச் சிரித்தேன்" என்றார் புலவர். கேட்டவர் மோர்க்காரியைத் திட்டிக்கொண்டு இடத்தை விட்டு அகன்றார்.

**4. பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழு விடை எழுதுவோம்.**

### ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

நாம் பாடநூலிலே ஆசுகவி காளமேகம் என்னும் புலவரைப் பற்றிப் படித்துள்ளோம். இவர் வசைபாடுவதில் மட்டுமே வல்லமை உள்ளவர். ஆனால், எங்களுடைய ஈழத்து ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை. புலவர்- எழுத்தாளர்- தாளிகை ஆசிரியர்- ஆசுகவி எனப் பல்துறை வித்தகர். இவர் அண்மைக் காலத்திலே வாழ்ந்த புலவராவார். 1860ம் ஆண்டிலே ஈழத்தின் வடபகுதியிலுள்ள வயாவிளான் எனும் ஊரில் தோன்றியவர் கல்லடி வேலுப்பிள்ளை. அவரது வீட்டிற்கு அருகில் ஒரு பெரிய பாறாங்கல் இருந்தமையால் அக்கல் அவரது பெயரின் முன் அடைமொழியாயிற்று. அவரது காலத்திலே இருந்த பல்வேறு புலவராலும் அறியப்பட்ட புகழுக்குரியவர். ஆறுமுகநாவலர் முதல் மறைமலையடிகள், ஞானப்பிரகாச அடிகள் வரை அவரது நண்பர்களாயிருந்தனர். காளமேகத்தைப் போலவே இவரும் போலிப் புலவர்களைக் கண்டால் நண்பர் என்றும் பாராது பெருஞ்சினம் கொள்வார். அவரது பாடல் ஒன்று அதற்குச் சான்றாகும்.

முன்னே ஒருகவிக்கு முந்நூறும் நானூறும்

பொன்னே கொடுப்பார் புலவர்க்கு - இந்நாளில்

வாசிக்க அறியாத வம்பர் வடிக்கின்றார்

காசுக்கைந் நூறு கவி.

இப்படியாகத் துணிவுடன் கண்டனங்களை எழுதுவார். இவரது எழுத்துகளை அச்சம் கரணியமாகப் பல நாளிதழ்கள் வெளியிட மறுத்தன. எனவே வேலுப்பிள்ளை தானே 'சுதேசநாட்டியம்' என்றொரு தாளிகையைத் தொடங்கித் தனது கருத்துகளை வெளியிட்டார். பெரியவர், சிறியவர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று வேறுபாடு காட்டாது எவராய் இருந்தாலென்ன? அவர்களிடம் குறைகுற்றம் கண்டால் அஞ்சாது கண்டனங்களை எழுதுவார். அத்தகைய கண்டனங்களால் சிறைத்தண்டனையும் பெற்றுள்ளார். எண்பத்துநான்கு அகவை வரை வாழ்ந்த கல்லடி வேலுப்பிள்ளை பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் தலைசிறந்த நூல் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' ஆகும். இந்நூல் ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆட்சிமுறை, மக்களது வாழ்வியற் பண்புகள் குமுகாய நிலைமைகள் பற்றிக் கூறும் அரியநூல் எனப் போற்றப்படுகிறது.

தாளிகை - சிற்றிதழ்

1. கல்லடி வேலுப்பிள்ளை என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?

______________________________

______________________________

2. கல்லடி வேலுப்பிள்ளைக்கும் காளமேகத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

______________________________

______________________________

3. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' என்ற நூலின் சிறப்பு என்ன?

______________________________

______________________________

4. புலவர் வேலுப்பிள்ளையின் தாயகமும் ஊரும் எவை?

______________________________________________

______________________________________________

5. ஆசுகவி என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

# அலகு 6

## மொழியியல்

**1.அ) உயிரிகளின் ஒலிக்குரிய பெயர்களை எழுதுவோம்.**

1. மான் ____________________
2. ஆந்தை ____________________
3. ஆ ____________________
4. நாய் ____________________
5. கிளி ____________________
6. யானை ____________________
7. பாம்பு ____________________
8. காகம் ____________________
9. புலி ____________________
10. மயில் ____________________

**ஆ) தரப்பட்டுள்ள சொல்லியங்களில் இடம்பெற்றுள்ள உவமையணியை உவமானம், உவமேயம், பொதுத்தன்மை எனப் பகுத்து எழுதுவோம்.**

1. குந்தவையின் தாமரைமுகம் அழகாக இருந்தது.
2. சங்கவையின் கயல்விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது.
3. மன்னன் மலைத்தோள்களை நிமிர்த்தி நடந்து வந்தான்.
4. தேன்மொழி பேசிய மழலை அனைவரையும் கவர்ந்தது.
5. குழந்தையின் முல்லைச் சிரிப்பில் தாய் தன்னை மறந்தாள்.

| | உவமானம் | உவமேயம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

## இலக்கணம்

2. அ) கீழ்வரும் சொல்லியங்களில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்களைக் கண்டறிந்து அவை எவ்வகை என எழுதுவோம்.

1. எழிலன் சுண்டல் உண்டான். ______________________
2. கோதை அங்காடியில் இனிப்பு வாங்கினாள். ______________________
3. கார்த்திகை பூத்துக் குலுங்கியது. ______________________
4. தலைக்கு நூறு ஈரோ கொடு. ______________________
5. தமிழீழம் போரினால் அல்லற்படுகிறது. ______________________

ஆ) கீழ்த்தரப்பட்டுள்ள சொல்லியங்களில் வரும் வேற்றுமை உருபுகளையும் அவை உணர்த்தும் பொருளையும் நிரற்கூட்டினுள் எழுதுவோம்.

1. புலவர் ஆய்ச்சியிடம் சென்று ஒரு குவளை மோர் வாங்கிப் பருகினார்.
2. மூதாட்டி வீதியைக் கடக்க, கடைவைவிளக்கின் அருகில் காத்திருந்தார்.
3. காளமேகப் புலவர் கடும் வெயிலில் களைத்து தண்ணீர் விடாயுடன் வந்தார்.
4. மாறனிலும் பார்க்க ஈழவன் நன்றாகக் காற்பந்து விளையாடினான்.
5. ஊர்ப்புறத்தில் காட்டுமல்லிகை மலர் நிறைந்து, அழகாகக் காட்சியளித்தது.

| | வேற்றுமை உருபு | பொருள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.

## ஆயரும் ஆனிரையும்

| | | | |
|---|---|---|---|
| மந்தை | ஆயர் | மாந்தன் | ஒட்டுறவு |
| ஆத்தொழில் | முல்லை | புல்லாங்குழல் | ஆனிரை |

நானிலங்களிலே குறிஞ்சிக்கு அடுத்ததாக மாந்தன் வாழ்வமைத்துக் கொண்ட இடம் முல்லை. ______________ காடும் காடு சார்ந்த இடமுமாகும். மலைவீழ் அருவிகளின் நீரினால் இந்நிலத்தில் நிலைத்திணைகள் செழிப்புற்று இருக்கும். வேட்டையாடி உணவு தேடிய ______________ ஆற்றோரங்களில் நிலையான வாழ்வை அமைத்துக் கொண்டபோது, காடுகளில் வாழ்ந்த விலங்குகளைப் பிடித்துப் பழக்கி வளர்க்கத் தொடங்கினான். எனவே, முல்லையில் இருந்த மேய்ச்சல் வாய்ப்புகளினால் ______________ வளர்ப்புச் சிறந்த தொழிலாயிற்று. புலால் உணவினதும் பால் உணவினதும் தேவையை மந்தைகள் பெரிதும் நிறைவு செய்தன. அதனால் மந்தைகளை மாந்தன் பேணினான். மந்தை என்பது ஆடுமாடுகளின் கூட்டம். ஆட்டு மந்தையை ஊர்ப்புறங்களில் மேய்த்தனர். மாடுகளை ______________ என்பர். ஆனிரைகளைக் காட்டுப் புல்வெளிகளில் மேய்த்தனர். ஆனிரை மேய்ப்போரை ஆயர் அல்லது இடையர் என்று கூறுவர். ஆ மேய்க்கும் தொழிலர் ______________ என்றும் குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் இடைநிலமான முல்லையில் வாழ்ந்ததால் இடையர் என்றும் அழைக்கப்பட்டனர். ஆயர் தம் ஆனிரைகளை வைகறையில் மேய்ச்சல் நிலங்களுக்கு ஓட்டிச் செல்வர். அவற்றுக்கு மேய்ச்சல் காட்டுவது, நீர் காட்டுவது, கொடிய விலங்குகளிலிருந்து காப்பது போன்ற செயல்களை கண்ணுங்கருத்துமாகச் செய்வர். இக்கரணியங்களால் ஆனிரைகளுக்கும் ஆயருக்கும் ஒரு ______________ உண்டாயிற்று. ஆனிரைகள் தமது ஆயர்களுக்கு இசைவாகக் கட்டுப்பட்டு நடந்தன. ஆயருடைய கைகளிலே எப்போதும் ______________ இருந்தது. அவர்களது புல்லாங்குழல் இசையில் ஆனிரைகள் மகிழ்ந்தன. மாலையில் ஆனிரைகளை ஒன்று கூட்டித் தொழுவத்திற்கு

இட்டுச் செல்வதற்குக் குழலிசையை எழுப்புவர். அவ்விசையைக் கேட்டு ஆனிரைகள் மேய்ச்சலை விட்டுத் தம் ஆயரிடம் வந்தடையும். இத்தகைய இனிய ஆத்தொழிலைப் பண்டைத் தமிழர் போற்றினர். இன்றும் உலகெங்கும் ______________________ சிறந்தே விளங்குகிறது.

4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.

## மாட்டுப்பொங்கல்

தமிழருடைய தலைசிறந்த விழாக்களிலே தைப்பொங்கலை அடுத்து மறுநாள் வருவது மாட்டுப்பொங்கலாகும். தைப்பொங்கல் அன்றே ஆண்டுப்பிறப்பு விழாவையும் கொண்டாடுகின்றோம். ஆண்டுப் பிறப்பின் மறுநாள் தமிழர் எடுக்கும் விழா மாட்டுப்பொங்கலாகும். இவ்விழா எத்தகைய நுண்ணறிவுச் சிந்தனையில் ஏற்பட்டது என்பதை இன்று பலரும் அறிந்திலர். ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை உலகின் பொருளாதாரம் பயிர்ச்செய்கையிலேயே தங்கியிருந்தது. இன்றும் கூட பொருளியல் நிலைகள் பல்வேறு துறைகளில் வளர்ந்திருந்தாலும் உழவு இல்லை என்றால் உணவில்லை. எனவே, பல்லாயிரம் ஆண்டுகாலமாக உயிர்களை வாழவைத்த தொழில் உழவு. அந்த உழவுத்தொழிலுக்கு உதவியது மாடு. மாடு இல்லை என்றால் உழவு இல்லை. வயலை உழ, அறுத்த நெற்சூட்டை அடிக்க உறுதுணையாக இருந்தது மாடு. இவை மட்டுமல்லாமல் மாட்டின் சாணமும் சிறுநீரும் மிகச்சிறந்த இயற்கைப் பசளையாகப் பயன்பட்டது. சத்துணவு ஊட்டப்பொருட்களான ஆனைந்தும் மாடே தந்தது. புத்துலக எந்திரங்கள் கண்டு பிடிப்பதற்கு முன்பு விலங்குகளே போக்குவரத்து ஏந்துகளாகப் பயன்படுத்தப்பட்டன. மக்கள் போக்குவரத்திற்கான வண்டிகள், வணிகத்திற்கான பொருட்களை ஏற்றிச் செல்லும் பொதி வண்டிகள் அனைத்தையும் மாடுகளே இழுத்துச் சென்றன. இன்று உலகில் உந்துகள் பெருகியுள்ள போதிலும் ஆசியநாடுகளில் பெரிதும் மாட்டுவண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு முன்னாளில் நாடும் அரசும் பொருளாதார நிறைவு பெற உழவிலேயே தங்கியிருந்தன. அதனால், உழவே பெருஞ்செல்வமாய் இருந்தது. இதற்கு முதலும் முற்றிலுமாக உதவுவது மாடு. ‘மாடு’ என்றால் தமிழில் செல்வம் என்பது பொருள். எனவேதான் பெருஞ்செல்வத் தேடலுக்கு உறுதுணையாக இருந்த மாவிற்கு மாடு என்று பெயரிட்டான் தமிழன்.

அந்த மாட்டைப் போற்றிக் கொண்டாடும் நாளாக ஆண்டுப் பிறப்பின் மறுநாள் விழாவாக மாட்டுப்பொங்கலைக் கொண்டாடினான். என்னே! எம் முந்தையோரின் விந்தையான நுண்ணறிவு.

1. தமிழாண்டு பிறந்தபின் தமிழர் எடுக்கும் விழா எது?

________________________________________

________________________________________

2. தைப்பொங்கல் விழாவின் சிறப்பு என்ன?

________________________________________

________________________________________

3. மாட்டைப் போற்றிக் கொண்டாடும் விழாவின் பெயரென்ன?

________________________________________

________________________________________

4. மாடு என்ற சொல்லிற்குச் சிறப்புப் பொருள் என்ன?

________________________________________

________________________________________

5. மாடு எவ்வகையில் மாந்தனுக்கு உதவுகிறது என்பதை விளக்குக.

________________________________________

________________________________________

**5. 'வாழிடப்பள்ளி' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவோம்.**

# அலகு 7

## மொழியியல்

**1. அ) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. நல்வாழ்வு

   ____________________

2. குற்றவாளி

   ____________________

3. உளமறிய

   ____________________

4. வளர்பிறை

   ____________________

5. பண்புடையோர்

   ____________________

**ஆ) கீழே தரப்பட்டுள்ள உயிரிகளின் இளமைப் பெயர்களை எழுதுவோம்.**

1. மான் ____________________
2. யானை ____________________
3. அணில் ____________________
4. குரங்கு ____________________
5. கீரி ____________________
6. தவளை ____________________
7. சிங்கம் ____________________
8. நாய் ____________________
9. பன்றி ____________________
10. புலி ____________________

**இ) கீழ்த்தரப்பட்டுள்ள சொல்லியங்களில் வரும் கீறிட்ட இடங்களைப் பொருத்தமாக நிறைவு செய்வோம்.**

1. கடலானது தண்மை பொருந்திய மதியின் ____________________
2. நாம் உற்ற நண்பரிடம் குறைகுற்றம் கண்டால் ____________________
3. அறிவுடைய மேலோர் நட்பு வளர்பிறை போல் ____________________
4. நல்ல நூல்களைத் திரும்பத் திரும்பப் படிக்கும்போது ____________________
5. கீழ்வானில் கதிரவன் காலிக்கச் செடிகளில் பூக்கள் ____________________

## இலக்கணம்

**2. அ) கீழ்வரும் தெரிநிலை வினைமுற்றுகளின் வினையடிகளையும் இடைநிலைகளையும் கண்டறிந்து எழுதுவோம்.**

| | வினையடி | இடைநிலை |
|---|---|---|
| 1. வருகிறது | | |
| 2. தேடுகிறாள் | | |
| 3. ஆடும் | | |
| 4. பெற்றான் | | |
| 5. தேடுவார் | | |
| 6. சொல்லும் | | |
| 7. படித்தான் | | |
| 8. கேட்பாள் | | |
| 9. கண்டது | | |
| 10. பார்த்தார் | | |

**ஆ) கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ப்பொருள் எழுதுவோம்.**

1. உயர்வு ____________
2. எளிது ____________
3. அண்மை ____________
4. அழுகை ____________
5. ஆக்கல் ____________
6. சிற்றூர் ____________
7. செலவு ____________
8. கனவு ____________
9. ஒற்றுமை ____________
10. இன்சொல் ____________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

**நட்பு ஆராய்தல்**

| | | | |
|---|---|---|---|
| நல்லறிவு | உள்ளத்தில் | நல்லவரோடு | நட்பாராய்தல் |
| நாலடியாரில் | துன்பம் | அத்தகையோர் | இன்பம் |

கற்றறிந்த நல்லோரோடு நட்புக் கொள்வதே சிறந்தது. அவர்களது நல்லறிவினால் அவரது ____________ அன்பு நிறைந்திருக்கும். அவ்வன்பினால் நாட்பட நாட்பட அவர்களது நட்பு மகிழ்வைத் தரும். அவர்களோடு பேசுவதும் பழகுவதும் நல்ல அறிவை வளர்க்கும். நமக்குத் துன்பம் வந்த காலத்திலே ____________ விரைந்து உதவுவர். நமது துன்பத்தைத் தமது துன்பமாகக் கருதி வருந்துவர். அவர்களது நட்பினால் எமக்கு ____________ வளரும். அதனால், அவர்களது நட்பு கரும்பை நுனியிலிருந்து தின்பதுபோல் போகப்போக மேன்மேலும் இனிமை தரும். உள்ளத்திலே நல்லன்பு இல்லாத கல்லாதோருடைய நட்பு காலஞ் செல்லச்செல்ல அன்பு குறைந்துவிடும். அவர்களுடைய நட்பிலே நமக்கு ____________ விளையாது. அந்த நட்பு கரும்பை அடியிலிருந்து தின்பதுபோல் இனிமை குறைந்து செல்லும். இறுதியில் அது அன்புச் சுவைதரும் நட்பாக இல்லாது விரும்பத் தகாத நட்பாகிவிடும். இந்த நட்பின் வகையை எடுத்துக் காட்டி, இந்தக் கரும்பின் உவமை ____________ சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

இதனை ______________________ அதிகாரத்தில் வள்ளுவர்,

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும்

என்னும் குறளில் நன்று தீது ஆராயாது கொள்ளும் நட்பானது சாகும் வரைக்கும் ஒருவனுக்குத் ______________________ விளைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, நாம் நட்புக் கொள்ளும் போது ______________________ நட்புக் கொள்ளுதல் சாலவும் நன்று.

**4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## அறநெறித்தமிழ்

எங்கள் தமிழ்மொழியை நாங்கள் அறநெறித் தமிழ் என்று போற்றிப் புகழலாம். ஏனெனில், எங்கள் தமிழ் அறங்களை மட்டுமல்ல அறந்தவறின் விளையும் எதிர்விளைவுகளையும் எடுத்துக் கூறுகிறது. எடுத்துக் காட்டாக ஒரு கதை.

ஓரூரிலே ஒரு முதலாளி இருந்தார். அவரிடம் பல வேலைக்காரர்கள் வேலைசெய்தனர். அவர்களில் ஒருவன் வேழன். மற்றவன் நாகன். வேழன் எப்போதும் உண்மையே பேசுவான். மரணமே வரினும் பிறருக்குத் தீங்கு செய்யான். நாகன் பொன்பொருளுக்காகப் பொய் பேசுவதில் வல்லவன். வேழனது பண்பு முதலாளிக்கு இடராக இருந்தது. முதலாளிக்கு வேழனிடத்தில் அவனது நேர்மை கரணியமாய் கொஞ்சம் அச்சம் இருந்தது. எனவே, அவனை வேலையிலிருந்து நிறுத்தவில்லை. ஆனால், அவனை மாட்டிவிட அமையம் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருநாள் அவரது ஆலைக்குள் கள்வர் நுழைந்து களவெடுக்க முயன்றனர். அதைக்கண்ட காவலாளி அவர்களைத் தாக்கினான். கள்வர் பலராகையால் எளிதாகக் காவலாளியைத் தாக்கி வீழ்த்திவிட்டு, ஆரவாரம் கேட்டு முதலாளியும் மற்றவர்களும் வருவதன் முன் ஓடிவிட்டனர். முதலாளியும் மற்றவர்களும் ஓடிவந்து பார்த்தால் காவலாளி இறந்துவிட்டான். முதலாளி இதுதான் சரியான சமயம் என்று எண்ணி வேழன் தான் காவளாளியைக் கொலை செய்தவன் என்று குற்றஞ் சாற்ற எண்ணினார். அதற்கும் பொய்ச்சான்று வேண்டுமே! நாகன் தான் இருக்கிறானே! அவனை அழைத்து, “இந்தா! நூறு பொற்காசுகள்.

இந்தக் கொலையை வேழன் செய்ததை நீ கண்ணால் கண்டாய். சரிதானே!" என்றார். நூறு பொற்காசுகள் அல்லவா! நாகனும் ஒப்புக்கொண்டான். வேழன் காவலாளியைக் கொன்ற விதத்தை அறமன்றில் நாகன் அழுதழுது நடித்துக் காட்டினான். நாகனது சான்றை நம்பிய அறமன்று வேழனுக்கு வாணாள் சிறைத் தண்டனை விதித்தது. வேழனுடைய பிள்ளைகளும் மனைவியும் கதறக் கதறக் காவலர் வேழனை இழுத்துச் சென்றனர். அதன் பின்னர் வேழனது மனைவியும் பிள்ளைகளும் வறுமையால் வாடினர். அவர்கள் நாகனைக் காணும்போதெல்லாம் வெறுப்போடு பார்த்தனர். அந்தப் பார்வையில் பொய்சொல்லி எங்கள் அப்பாவைச் சிறைக்கு அனுப்பினாயே! என்று குற்றம் சாற்றுவது தெரிந்தது. அவனுக்கு அது மனதைக் குடையத் தொடங்கியது. வெறும் நூறு பொற்காசுகளுக்காகப் பொய்சொல்லிவிட்டாயே! அந்தக் குடும்பத்தை அழித்துவிட்டாயே! என்று அவனது மனச்சாட்சி உறுத்தத் தொடங்கியது. அந்த உறுத்தலால் நாகன் வேளாவேளைக்கு உண்ணாமல் உறங்காமல் துன்புற்றான். அதனால், கடுமையான நோய்களால் பீடிக்கப்பட்டு படுத்த படுக்கையானான். வேழனது நன்னடத்தை கரணியமாக ஏழாண்டுகளில் விடுதலையாகி வீட்டுக்கு வந்தான். அவனது குடும்பத்தினர் பெருங்களிப்பில் மூழ்கினர். அதேவேளை படுத்த படுக்கையான நாகனது மனைவியும் பிள்ளைகளும் வறுமையில் வாடினர்.

இதனையே,

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

என்று குறள் கூறுகிறது.

1. எதனால் எமது மொழியை அறநெறித்தமிழ் என்று சொல்லலாம்?

________________________________________

________________________________________

2. வேழன் எத்தகைய பண்புடையவன்?

________________________________________

________________________________________

3. நாகன் எதற்காகப் பொய் பேசினான்?

---

---

4. மனச்சான்று உறுத்தியதால் நாகனுக்கு நடந்தது என்ன?

---

---

5. வாணாள் சிறைத்தண்டனை என்றால் என்ன?

---

---

# அலகு 8

## மொழியியல்

**1. அ) தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களின் குறிப்புப் பொருள் புலப்படுமாறு சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. ஆலாய்ப்பறத்தல் ______________________________

______________________________

2. ஓட்டைக்கை ______________________________

______________________________

3. கைநீட்டுதல் ______________________________

______________________________

4. நடைப்பிணம் ______________________________

______________________________

5. பல்லுக்காட்டுதல் ______________________________

______________________________

**ஆ) சொற்பொருள் எழுதுவோம்.**

| | |
|---|---|
| 1. மாட்சி ______________ | 6. வாய்மை ______________ |
| 2. மடமை ______________ | 7. வைதல் ______________ |
| 3. கைம்பெண் ______________ | 8. தஞ்சம் ______________ |
| 4. இடுக்கண் ______________ | 9. மூடர் ______________ |
| 5. பன்னூல் ______________ | 10. அல்லல் ______________ |

## இலக்கணம்

**2. அ) கீழ்வரும் எச்சவினைகளை எவ்வகையென இனங்கண்டு எழுதுவோம்.**

1. செய்யாது ______________________
2. ஓடாத ______________________
3. அழுகிய ______________________
4. அழும் ______________________
5. சென்ற ______________________
6. ஆடி ______________________
7. மறைக்காது ______________________
8. விற்காத ______________________
9. பாடும் ______________________
10. கற்று ______________________

**ஆ) கீழ்வரும் சொல்லியங்களில் வரும் எச்சவினைகளை இனங்கண்டு அவை எவ்வகையென எழுதுவோம்.**

1. பறவைகள் வானில் பறந்து சென்றன.

______________________________________________

2. நிலவன் அக்கம்பக்கம் பாராது நடந்தான்.

______________________________________________

3. இன்று வேலை இல்லாத இளைஞர் தொகை அதிகரித்துச் செல்கிறது.

______________________________________________

4. ஓடி விளையாடிய குழந்தை களைப்பினால் உறங்கியது.

______________________________________________

5. கற்றறிந்த அறிஞர் அரங்கில் கூடி இருக்கின்றனர்.

______________________________________________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

**மங்கையர் மாநாடு**

| | | | |
|---|---|---|---|
| பன்னூறு | பெண்விடுதலை | மாநாடு | நானிலம் |
| மேலாண்மை | உரிமைகளை | ஆக்கமும் | சிதைக்கும் |

உலகெங்கும் வாழும் மங்கையர் உறவுகளே! இவ்வுலகின் அன்பின் அடையாளங்களே! நன்மக்களை ஈன்று இந்த ______________ நலம்பெறத் தருகின்ற தாய்க்குலமே! அனைவரும் திரண்டு வருக! வருக! என்று இருகரம் நீட்டி வரவேற்கின்றோம்.

______________ என்றால் 'ஆண்களை எதிர்த்து நிற்றல்' என்று கருதிக்கொண்டு சில மங்கையர் தவறான கருத்தைப் பரப்பி வருகின்றனர். அது தவறு. அக்கருத்து குமுகாயத்தில் குடும்ப வாழ்வினைச் ______________. பெண்விடுதலை என்பது பெண்களுக்கான உரிமை மறுப்புகளை எதிர்த்து எம் ______________ நிலைநாட்டுதல், ஆண்களை எதிர்த்தல் என்பதல்ல. பெண்களை மதிக்கின்ற, போற்றுகின்ற ஆண்கள் கூட, ______________ ஆண்டுகளாகக் குமுகாயத்தில் ஊடுருவியுள்ள குமூகப் பழக்கவழக்கங்கள் ஆண் மேலாண்மைத் தனத்தைக் கொண்டிருக்கின்றன என்பதை உணரவில்லை. எனவேதான், ஆண் ______________ என்றால் என்ன? என்பதை அவர்களுக்கு உணர்த்தவும் பெண்விடுதலை என்றால் என்ன? என்பதைத் தாய்க்குலத்திற்கு எடுத்துரைக்கவும் இந்த ______________ கூடுகிறது. வாய்ப்புள்ள அனைவரும் வந்து சேர்ந்து பெண்விடுதலைப் போருக்கு ஊக்கமும் ______________ வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். உங்கள் வரவு எம்மின நலனுக்கு வலிவு தரும்.

**காலம்- பிற்பகல் 16.00 மணி, 01 தைத்திங்கள் 2010**
**இடம் - தமிழ்மன்றம், இலண்டன்**

இவண்,

அகில உலக மங்கையர் பேரவை

**4. பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## பெண்ணின் பெருமை

மங்கைய ராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளருமம்மா!

சிந்திய கண்ணீர் துடைப்பவரார் - பயம்
சிந்தை அகன்றிடச் செய்பவரார்?
முந்து கவலை மறந்திடவே - ஒரு
முத்தம் அளிக்க வருபவரார்?

உள்ளம் தளர்வுறும் நேரத்திலே - உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவரார்?
அள்ளி எடுத்து மடியிருத்தி - மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவரார்?

அன்பினுக் காகவே வாழ்பவரார் - அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்?
இன்ப உரைகள் தருபவரார் - வீட்டை
இன்னகை யால்ஒளி செய்பவரார்?

மங்கை யராகப் பிறந்தவரே - இந்த
மாநிலம் பயனுற வாழுகின்றார்
இங்கிவ ரன்பின் வலியாலே - எந்த
இன்னலும் பிறர்க்காய்த் தாங்கிடுவார்.

- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

பங்கயம் - தாமரை.

ஆவி - உயிர்.

இன்னகை - அன்புச்சிரிப்பு

1. எந்த இன்னலையும் பிறருக்காகத் தாங்கி உயிர் விடத் துணிபவர் யார்?

______________________________________________

______________________________________________

2. எவ்வாறு அன்பு பெருக்கி வளர்க்கப்படுகிறது?

______________________________________________

______________________________________________

3. மங்கையரால் பயனடைவது எது?

______________________________________________

______________________________________________

4. எதனால் வீட்டுக்கு ஒளி கிடைக்கிறது?

______________________________________________

______________________________________________

5. எப்பொழுது உயிரூட்டும் உரைகள் உரைக்கப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

**5. 'தமிழுக்குத் தந்த கனி' என்ற பாடலின் கதையை உமது உரைநடையில் எழுதுக.**

# அலகு 9

## மொழியியல்

**1. அ) கீழ்வரும் பழமொழிகளின் பொருள் புலப்படச் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். ____________________

____________________

2. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. ____________________

____________________

3. துள்ளின மாடு பொதி சுமக்கும். ____________________

____________________

4. ஒருகாசு பேணின் இருகாசு தேறும். ____________________

____________________

5. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும். ____________________

____________________

**ஆ) கீறிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுதிச் சொல்லியம் ஆக்குவோம்.**

**(மயக்கொலி வேறுபாடு)**

1. போர் அவலத்தினால் அனைத்து முகங்களும் ____________ போயிருந்தன.

(களையிழந்து, கழையிழந்து)

2. வீட்டிலிருந்து வெகு ____________ எறிகணை விழுந்த ஒலி கேட்டது.

(தொலைவில், தொளைவில்)

3. முதியவர் ஆளொரு பக்கமும் ____________ பக்கமுமாய் படுக்கையிலே கிடந்தார்.

(துணியொரு, துனியொரு)

4. ஆற்றலிலும் ________________ ஆணுக்குப் பெண் சற்றும் குறைந்தவள் இல்லை. (அரிவிலும், அறிவிலும்)

5. பாரதி கண்ட புதுமைப்பெண் அஞ்சாத ________________ கொண்ட நெஞ்சினள். (உருதி, உறுதி)

**இ) கீழ்வரும் சொற்களுக்குப் பொருள் எழுதுவோம்.**

1. வையகம் ________________
2. மதி ________________
3. வைகறை ________________
4. வேழம் ________________
5. வேட்கை ________________
6. விந்தை ________________
7. விசும்பு ________________
8. மூப்பு ________________
9. வெகுளி ________________
10. தொலைவு ________________

## இலக்கணம்

**2. அ) தரப்பட்டுள்ள சொற்களைப் புணர்த்துவோம்.**

1. மூன்று + நூறு - ________________
2. ஐந்து + நூறு - ________________
3. பொன் + ஓலை - ________________
4. காடு + அரண் - ________________
5. கடுமை + போர் - ________________
6. கல் + எறிந்தான் - ________________
7. நெல் + பயிர் - ________________
8. மா + சோலை - ________________
9. பாடம் + விளக்கம் - ________________
10. கண் + வலி - ________________

ஆ) இயல்புப் புணர்ச்சிக்கும் மாறுபடு புணர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

______________________________

______________________________

______________________________

இ) இயல்புப் புணர்ச்சிகள் இருவகை. அவற்றினை விளக்குக.

______________________________

______________________________

______________________________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

பெருமை

| | | | |
|---|---|---|---|
| வலிமையை | இனக்கலவரங்கள் | முன்னணியில் | மாணவர்கள் |
| புதிய உலகை | சளைக்காது | கையேந்தி | சிறுபான்மை |

வெளிநாடு ஒன்றில் ஒரு கலந்துரையாடலில் பலநாட்டு ______________ சந்தித்தனர். ஒவ்வொரு மாணவரும் தத்தமது நாட்டினைப் பற்றிப் பெருமையுடன் கூறிக்கொண்டனர்.

"எங்கள் நாடுதான் முதன்முதலில் உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள் என்று குரல் கொடுத்து, ______________ விழித்தெழச் செய்தது" என்றான் ருசிய மாணவன்.

"தனிமனித வளர்ச்சிக்குத் தடையாக எதுவுமே இருக்கக்கூடாது என்ற கோட்பாட்டால் உயர்வடைந்த நாடு நமது நாடு" என்று கூறினான் அமெரிக்கச் சிறுவன்.

"காந்தியம் என்னும் அருளாண்மையே நமது நாட்டின் சொத்துடைமை என்று கூறினாலும் ______________ இனங்களை அடக்குவதில் வெற்றிகொண்ட ஆரிய நாடு எனது நாடு" என்று இந்தியன் கூறினான்.

"நாட்டின் எவ்வித உயர்ச்சிக்கும் பிறநாடுகளிடம் கையேந்தலாகாது என்று தன் மக்களின் ______________ உலகறியச் செய்த நாடு எங்கள் சீனா" என்றான் சீனமாணவன்.

"இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கா எங்கள் நாட்டின் மீது அணுகுண்டுகளைப் போட்டுப் பேரழிவு செய்த போதிலும் ______________________ எமது சொந்தக் காலில் உறுதியுடன் நின்று, நாட்டுப் பற்றோடு உழைத்து உலகில் பொருளாதார ______________ நிற்கும் நாடு" எனது நாடு என்றான் யப்பான் மாணவன்.

இலவய அரிசி மூலமாகவும் ____________________ மூலமாகவும் மக்களைப் பிச்சைக்காரர்களாகவும் ஏதிலிகளாகவுமாக்கி, பின் வெளிநாட்டுக்கு ஏதிலிகளாகக் கலைத்து, பிறநாடுகளிடம் ____________________ நிற்கும் பிச்சைக்கார நாடு எனது நாடு எனக் கூறுவதா எனக்குப் பெருமை? என எண்ணிய ஒரு மாணவன் தலைகுனிந்து நின்றான்.

**4. பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## திருந்தாத குமுகாயம்

*திருந்தாத குமுகாயம் இருந்தென்ன நன்மை? - பிறர்க்காய்*
*வருந்தாத உள்ளங்கள் வாழ்ந்தென்ன நலமோ?*
*நிரம்பாத உளத்தோடு நியாயங்கள் காண்பார் - நித்தம்*
*நிலையில்லா மனத்தோடு இறைவனைத் தொழுவார்*
*புறம்பேசும் போக்கொடு பெருமைகள் சொல்வார் - என்றும்*
*பொல்லாத செயலையே செய்துளம் மகிழ்வார்*
*ஏற்றமும் தாழ்வுமே எப்போதும் காண்பார் - மாந்தர்*
*எல்லோரும் ஒன்றெனும் உயர்வினைக் காணார்*
*காசுக்காய்ப் பொய்யையே மலிவாகக் கொள்வர் - அந்தக்*
*காசையே தங்கள் வாழ்வாக மகிழ்வார்*
*இல்லாது ஒருநாள்அக் காசெல்லாம் போகும் - அந்நாள்*
*இடிந்து தளர்ந்து நடுத்தெருவினில் நிற்பார்*
*இறைவனும் அன்றோடித் தாங்கிட வாரார் - இட்ட*
*பூசைபலி எல்லாம் வீணென்று காண்பார்*
*நல்லாராய் வாழ்வதே நன்றென்று காண்பீர் - மாந்த*
*நேயத்திற் கீடான செல்வம் வேறுண்டோ?*

எல்லோரும் நல்லோரே உறவென்று கொண்டால் - மண்ணில்
எல்லோரும் நல்வாழ்வு வாழுதல் சாலும்
திருந்தாத குழுகாயம் இருந்தென்ன நன்மை? - பிறர்க்காய்
வருந்தாத உள்ளங்கள் வாழ்ந்தென்ன நலமோ?

- தாமரைக் கண்ணன்

1. எதற்காக உள்ளங்கள் வருந்தவேண்டும்?

______________________________

______________________________

2. மாந்தர் எதனைக் காண்பதில்லை என்கிறார் கவிஞர்?

______________________________

______________________________

3. ஈடற்ற செல்வம் எது?

______________________________

______________________________

4. பூசை, பலி என்பன பயனற்றன என்பதை எப்போது காண்பர்?

______________________________

______________________________

5. எத்தகைய குழுகாயம் இருந்து பயனில்லை?

______________________________

______________________________

# அலகு 10

## மொழியியல்

**1. அ) சொற்பொருள் எழுதுவோம்.**

1. மகவு ______________________
2. கூற்றம் ______________________
3. மூதாதை ______________________
4. சுற்றம் ______________________
5. விண்மீன் ______________________
6. பைந்தமிழ் ______________________
7. வெந்தழல் ______________________
8. வள்ளல் ______________________
9. இடறுதல் ______________________
10. சேய் ______________________

**ஆ) எழுத்துப்பிழைகளைத் திருத்தி எழுதுவோம்.**

1. இராவணன் பன்பும் வீறமும் கள்வியும் மிக்க தளைவன்.

______________________________________________

2. பாவேந்தர் உல்லம் நிரைந்து பொங்கும் தமிள் உனர்வுல்லவர்.

______________________________________________

3. மங்கை பாளைக் கறந்து காச்சிய பின் பில்லைகல் பறுகுவதற்கு கொடுத்தாள்.

______________________________________________

4. தாய் மகவைக் கன்டதும் பெறிதும் உவந்தால்.

______________________________________________

5. தஞ்சைப் பெறுங்கோயில் இராசராசசோளனால் கற்றப்பட்டது.

______________________________________________

**இ) கீழ்வரும் சொற்களின் பொருள் புலப்படுமாறு சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. இயற்பெயர்

___

2. மூதாதை

___

3. கனிவு

___

4. பெருமிதம்

___

5. தொழிலாளி

___

## இலக்கணம்

2. அ) 1. முன்னிலை ஒருமை ஏவல் வினையைக் குறிக்கும் சொல்லியங்கள் இரண்டு எழுதுவோம்.

___

___

2. வியங்கோள் வினைக்கும் ஏவல் வினைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் எவை?

___

___

3. முன்னிலைப் பன்மை ஏவல் வினையைக் குறிக்கும் சொல்லியங்கள் இரண்டு எழுதுவோம்.

___

___

ஆ) 1. வியங்கோள் வினைகள் எவை? அவற்றின் பொருளைத் தருக.

______________________________________________

______________________________________________

2. ஏவல் எதிர்மறைவினையைக் குறிக்கும் சொல்லியங்கள் இரண்டு எழுதுவோம்.

______________________________________________

______________________________________________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

**உணர்வுக் குழையல்**

| | | | |
|---|---|---|---|
| நிலப்பரப்பு | மடியில் | வானெங்கும் | உயிரை |
| காப்பாற்ற | மாந்தரை | அறுக்க | நுழைந்து |

எண்சுவைகளான நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை மாந்த வாழ்வின் எல்லா நிலைகளிலும் இடம்பெற்று ____________________ பக்குவப்படுத்துகின்றன. ஆனால், பல்சுவைகளையும் ஒருசேரப் பட்டுணர்வது என்பது மிகப்பெரும் வலிவுகொண்ட உள்ளத்தாலேயே இயலும். வலிய உள்ளம் இன்றேல் அது நொருங்கிப்போகும். அன்று அந்தக் கடைசி நாள். வாழ்வின் அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து தன்னை மறந்து, ____________________காப்பாற்றிக்கொள்ளத் துடிக்கிற உயிர்த்துடிப்பு. ஒருசிற்றூர் என்றுகூடச் சொல்லிக்கொள்ள முடியாத சிறிய ____________________. அதற்குள் நெருங்கிக் கிடக்கும் மக்கள் கூட்டம்; பல இலக்கம் மக்கள்; நாலாபுறமிருந்தும் வாணவேடிக்கைபோல் ____________________ தீயின் சீறல்கள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. அத்தனையும் குண்டுகள். எதிர்ப்போர் இல்லாமலே படைகள் மக்கள் மீது போர் புரிந்து கொண்டிருக்கின்றன. அட அரக்கர்களே! என்னுள்

சினக்கிறேன். படைவீரர் தம் வன்கொடும் உணர்வுகளைத் தீர்ப்பதற்கு மக்களிடையே ______________________ விட்டனர். படையினர் ஏவிய ஒரு குண்டு ஒரு படைவீரனைத் தாக்குகிறது. 'அம்மே' என்று கதறியபடி தரையில் விழுகிறான். பக்கத்தில் ஓர் அலறல். அம்மா! அம்மா! இறந்து கிடந்த தாயின் ______________________ கிடந்து அழும் ஒரு நான்கு அகவைக் குழந்தை. நெஞ்சம் வலிக்கிறது. ஆனாலும் உயிர்தப்ப ஓடுகிறேன். எங்கும் மரண ஓலம்!! மனம் பேதலிக்க ஓடுகிறேன். என் அம்மம்மா வழியில் படுகாயத்துடன் கிடந்து துடிக்கிறார். ஆச்சீ! என்று கதறிக்கொண்டே ஓடித் தூக்கப் போனேன். என்னைக் ______________________ உன்னால் முடியாது. நீ ஓடம்மா! ஓடம்மா! என்கிறார் அம்மம்மா. இரத்தபாசத்தின் உயிரறா இணைப்பு என் இதயத்தை ______________________ அம்மம்மாவை விட்டுவிட்டு ஓடுகிறேன். அஞ்சினேன்! அழுதேன்! சினந்தேன்! இரங்கினேன். இந்த உணர்வுக் குழையலுக்குள் என்னிலை மறந்து உயிர்காக்க ஓடுகிறேன்.

**4. பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### போர் பிரித்த உறவு

*உயிர்களால் தழுவிக் கொள்வோம்!*
*உடல்களால் பிரிந்து போவோம்!*
*எம் பிரிவிற்காக அழாதே!*
*நம் துன்ப துயரங்கள்*
*இந்த மண்ணின் காயங்களை விடவும்*
*கொடுமையானவை அல்ல அன்பே!*

*ஏதிலிகளாய் நம்மை*
*வழியனுப்பும் நம்மூர் நாளை*
*அதிதிகளாய் வரவேற்கும் இது உறுதி!*
*நம் பிரிவின் இடைவெளிகளில்*
*எங்கோ ஒரு தொலைவில்*

ஏக்கத்தினால் உளத்தைப் போர்த்தி
பழைய நினைவுகளால் அழலாம்
அந்த நினைவுகளின் உறவால்
பைத்தியங்களாய் அலைந்து திரியலாம்.

என் போகுதலின் இலக்கு
எனக்குப் புரியவில்லை
எங்கோ நீ அடையப்போகும்
ஏதிலி முகாமும் உனக்காக அழலாம்

வாழ்வின் வளத்தை இழந்து
வலிந்து தந்த ஏதிலி வாழ்வை
ஏற்றநாம் எப்போ இனிக் காண்போம்
அந்த நாளுக்காய் நீயும் வழிபடு!
எம்நாட்டின் அமைதிக்காவும் வழிபடு!

மகிழ்ச்சி வேறு மாந்தநேயம் வேறில்லை
நம் மகிழ்வெல்லாம் தொலைந்து கிடப்பது
மாந்தநேயத்தின் மடியில்தானே
பிரிவு என்பது நிரந்தரமல்ல அன்பே!
மரணமும் கூடத்தான்.

உயிர்களால் தழுவிக்கொள்வோம்!
உடல்களால் பிரிந்து போவோம்!

பெட்டாஃபி
கங்கேரிய விடுதலைப் போராளிக் கவிஞர்

1. எமது துன்ப துயரங்களை விடக் கொடுமையானது எது?

______________________________________________

______________________________________________

2. உடல்கள் பிரிந்து சென்றாலும் ஏதிலிகள் எதனால் பிரிய மாட்டார்கள்?

______________________________________________

______________________________________________

3. எதற்காக வழிபடச் சொல்கிறார் கவிஞர்?

______________________________________________

______________________________________________

4. ஏதிலிகளின் மகிழ்வு தொலைந்தது எங்கே?

______________________________________________

______________________________________________

5. ஏதிலி முகாம்களில் அடைந்து கிடக்கும் மக்களது மனநிலை என்ன?

______________________________________________

______________________________________________

# அலகு 11

## மொழியியல்

**1. அ) கீழ்வரும் சொல்லியங்களில் கீறிட்ட இடங்களைப் பொருத்தமாக நிறைவு செய்வோம்.**

1. சிங்கள மன்னர்கள் பாண்டியருக்கு அடிக்கடி படையுதவி ______________________
2. வன்னிக் குறுநில அரசுகள் யாழ்ப்பாண அரசின் மேலாளுமையை ____________
3. சிங்கள வரலாற்று ஏடுகள் உண்மையை மறைத்து ____________________________
4. இராசேந்திரசோழன் விகாரைகளை ____________________________________________
5. இலங்கையின் இறுதிச் சோழமன்னன் ________________________________________

**ஆ) தரப்பட்டுள்ள உவமை அணிகளை உருவக அணியாக மாற்றிச் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. கல்நெஞ்சம் ____________________________________________________________

________________________________________________________________________

2. மதிமுகம் ______________________________________________________________

________________________________________________________________________

3. கடலறிவு _______________________________________________________________

________________________________________________________________________

4. மலர்க்கை ______________________________________________________________

________________________________________________________________________

5. தேன்தமிழ் ______________________________________________________________

________________________________________________________________________

## இலக்கணம்

2. அ) கீழ்வரும் சொற்களைத் திணை பால் எண் இடம் என வகைப்படுத்தி நிரற் கூட்டினுள் எழுதுவோம்.

| | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| 1. பாடுகின்றோம் | | | | |
| 2. ஓடுகின்றன | | | | |
| 3. வந்தது | | | | |
| 4. உண்டாய் | | | | |
| 5. கண்டீர்கள் | | | | |
| 6. நடனமாடினாள் | | | | |
| 7. போற்றுவர் | | | | |
| 8. போராடினேன் | | | | |
| 9. ஆடுகிறது | | | | |
| 10. கொறிக்கின்றன | | | | |

ஆ) கீழ்வரும் சொற்களுக்கு எதிர்ப்பாற் சொற்கள் எழுதுவோம்.

1. ஒருவன் ______________
2. துணைவி ______________
3. விறலி ______________
4. மருத்துவன் ______________
5. பேரன் ______________
6. பாடகி ______________
7. காவற்காரன் ______________
8. தமையன் ______________
9. நாயகி ______________
10. சின்னம்மா ______________

**3. தரப்பட்டுள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக எழுதி, பந்தியை நிறைவு செய்வோம்.**

**பாணன் பெற்ற பரிசு**

| | | | |
|---|---|---|---|
| வடஈழத்தை | நூற்றாண்டில் | யாழ்ப்பாணம் | மணற்றி |
| பகைவர் | ஈழம் | இசையிலும் | வீரராகவன் |

பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாண அரசனாக முடிசூடிய கூழங்கைச் சிங்கையாரியப் பேரரையனுடன் ______________________ வந்த முத்துராயக் கவிராயர் இயற்றிய 'கைலாயமாலை' என்னும் யாழ்ப்பாண வரலாற்று நூலின்படி, யாழ்ப்பாணம் என்ற பெயர் அப்பட்டினத்துக்கு வந்த வரலாற்றைக் காண்போம். ______________________ ஆண்டுவந்த மன்னர் குடிவழியில் வந்த நரசிங்கராயன் என்ற மன்னன் கதிரைமலையிலிருந்து ஆட்சி செய்து வந்தான். ______________________ அச்சமின்றியும் கல்வி கலைகளை வளர்த்தும் நல்லாட்சி புரிந்து வந்தான். அவன் மிகுந்த இசைப்பிரியன். நரசிங்கராயனைப் பற்றிக் கேள்விப்பட்ட ______________________ என்னும் பாணன் நரசிங்கராயனைப் பாடிப் பரிசு பெற எண்ணினான். பிறவிக் குருடனான வீரராகவன் நரசிங்கராயன் மீது ஒரு பாடலும் பாடிக்கொண்டு ______________________ வந்தான். அரசன் பாடலைக் கேட்பதற்கு ஒழுங்கு செய்தான். வீரராகவன் தான் பாடிவந்த பாடலைத் தானே யாழ்மீட்டிப் பாடினான் அந்த ______________________ பாடற்பொருளிலும் மகிழ்ந்த மன்னன், வீரராகவனுக்கு ஒரு நாட்டைப் பரிசளித்தான். அந்நாடு மணற்றியாகும். காடு, பற்றைகள் நிறைந்த மணற்குன்றுகள் நிறைந்திருந்தமையால் அப்பகுதி ______________________ எனப்பட்டது. மணற்றியைப் பரிசாகப் பெற்ற யாழ்ப்பாணன், தன் சுற்றத்தவரை அழைத்து வந்து காடு திருத்தி நாடாக்கினான். விளைநிலங்களைப் பண்படுத்தி குடிமக்களைக் குடியமர்த்தினான். நாடு செல்வச் செழிப்பால் உயர்ந்த பட்டினமாயிற்று. யாழ்ப்பாணனால் இப்பட்டினம் உருவாக்கப்பட்டதால் 'யாழ்ப்பாணம்' எனப் பெயர் பெற்றது. யாழ்ப்பாணம் என்ற இவ்வூர்ப் பெயர் முதன்முதலாக பதினான்காம் ______________________ வாழ்ந்த அருணகிரிநாதரால் முருகன் மேற்பாடப்பட்ட பாடலில் காணப்படுவதா அறிஞர் கூறுகின்றனர்.

**4. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## தமிழரின் மாந்தநேயப் போர்முறை

பண்டைத்தமிழ் மன்னர்கள் பகைநாட்டின் மீது போர் தொடங்குவதற்கு முன்பு கூட மாந்தநேயத்தைப் போற்றிப் பேணி வந்துள்ளனர். போர் தொடங்குவதற்கு முதல் பகை நாட்டிலுள்ள பல்வேறு மக்களுக்கும் போர் தொடங்கும் செய்திகளை, பறை அறைந்து அறிவிப்பர். ஆநிரைகளும் ஆசிரியர், அந்தணர் போன்ற சான்றோர்களும் தங்கள் குடிவழிக்கு இன்னும் மக்களைப் பெறாத இணையரும் போரோடு தொடர்பில்லாத அனைத்து மக்களும் காப்பரண்கள் தேடிச் சென்றுவிடுங்கள்! போரோடு தொடர்புடையாரும் படைவீரர்களுமே எம்மால் தாக்கப்படுவர். கடும்போர் தொடங்கவுள்ளோம்! என்று பகைநாட்டு மக்கள் துன்புறாமல் போர் செய்தனர். ஆனால், இன்றோ! எங்கோ இருந்து கொண்டு ஒரு ஆழியை அழுத்தி எதிரியின் போர்க்களத்தில் ஒரு புல்பூண்டு கூட மிஞ்சாமல் அழித்துவிடக் கூடிய ஆயுதங்கள் பெருகிவிட்டன. கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து தாக்கும் ஆயுதங்கள்; மூச்சோடு உள்நுழைந்து ஆளை எரிக்கும் நச்சுவளிக் குண்டுகள்; கொத்தணிக் குண்டுகள் என்று எத்தனையோ கொலைக் கருவிகள் மக்களைக் கொன்று குவிக்கின்றன. அதிலும் சிங்கள அரசானது மாந்தர் எண்ணிப் பார்க்க அஞ்சும் வெங்கொடுமை நிகழ்த்துகிறது. அரண்வலயம் என்று ஒரு சிறுநிலப் பகுதியை ஒதுக்கி "போர்முனையை விட்டு அந்த வலயத்துள் வாருங்கள்! உங்களைக் காப்போம்" என்று மக்களைக் குவியச் செய்து விட்டு, கொத்தணிக் குண்டுகளையும் எரிகுண்டுகளையும் வீசி ஆயிரமாயிரம் தமிழரைக் கொன்று குவித்துள்ளது. ஆயிரமாயிரம் மக்களை உறுப்பிழந்தோர் ஆக்கியுள்ளது. என்னே! சிங்களத்தின் மாந்தநேயமும் அதைப்பார்த்தும் பாராதது போல் இருக்கும் உலகின் மாந்தநேயமும்.

1. மாந்தநேயத்தைப் போற்றிப் பேணி வந்தோர் யாவர்?

__________________________________________

__________________________________________

2. தமிழ் மன்னரால் கடைப்பிடிக்கப்படும் மாந்தநேயப் போர்முறைகள் எவை?

__________________________________________

3. இன்று உலகில் எவ்வாறான போர் முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

4. மாந்தநேயம் என்றால் என்ன?

______________________________________________

______________________________________________

5. சிங்களம் எத்தகைய போர்முறையைக் கடைப்பிடித்தது?

______________________________________________

______________________________________________

**5. சூழல் மாசடைதல் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுவோம்.**

நீர்,நிலம்,காற்று மாசடைதல்

மாசடைவதற்கான கரணியங்கள்

குப்பை, உந்துகளின்புகை, தொழில் ஆலைகளின் கழிவுப்பொருட்கள்

நோய் பரவுதல்

தடுப்பதற்கான வழிமுறைகள்; சூழலைப்பேணல்

மரக்கன்றுகள் நாட்டுதல்

சூழற்பாதுகாப்பு இயக்கம்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வளர் தமிழ் 12
பாடநூல்

வளர் தமிழ் 11
பாடநூல்

வளர் தமிழ் 10
பாடநூல்

வளர் தமிழ் 9
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 8
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 7
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 6
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 5
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 4
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 3
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 2
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 1
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் பாலர் நிலை
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் மழலையர் நிலை
பாடநூல் | எழுதுதல்